Reg'sered as a News Paper in Ceylon

விலை: சதம் 15

அன்பர்கள், ஆதரவாளர்கள்
விற்பனையாளர்கள்,
பாவிப்பாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகுக.
நாடு நலம்பெற நாம் நற்சேவை செய்ய, எமது உற்பத்திப் பொருள்களை வாங்கி உபயோகியுங்கள்.
மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி

எல்லோருக்கும் எமது
புதுவருட வாழ்த்துக்கள்


புத்துணர்ச்சிக்கும்
உற்சாகத்திற்கும்
பாவியுங்கள்
அண்ணா
கோப்பி
அண்ணா இண்டஸ்றி
இணுவில்.

மலர் 13 | சித்திரை 1 | ஸபர் 17 | (14–4–71) | புதன்கிழமை | இதழ் 62

## வடபகுதி மக்களுக்கு இனிப்பான புத்தாண்டுச் செய்தி!

# சீனிக்கப்பல் யாழ்ப்பாணம் வருகிறது; தட்டுப்பாடு நீங்கும்

## பருத்தித்துறையைநோக்கி மண்ணெண்ணைக் கப்பல்!

### நேசநாடுகள் இராணுவ உதவி

— எஸ். எம். ஜி, —

யாழ்ப்பாணம் புதன்

**யாழ்ப்பாணப்பகுதி மக்களுக்கு புதுவருடத்தன்று இனிப்பான செய்தி யொன்றை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமர சேகரா வழங்கியிருக்கிருர்.**

யாழ் ம வட்டத்தில் இப் பொழுது நிலவும் சீனித்தட் டுப்பாடு இன்னும்சில தினங் களில் நீங்கி விடுமென்றும் தமது கோரிக்கையை ஏற்று சீனிக்கப்பலொன்றை காங்கே சன்துறைத் துறைமுகத் துக்குத் திருப்பி விட்டிருப்ப தாக அரசாங்கம் தமக்குத் தகவல் தெரிவித்திருப்பதா கவும் திரு விமல் அமர சேகரா நேற்றிரவு தெரிவித் தார். இக்கப்பல் இன்னும் இரண்டுமூன்று தினங்களில் வந்து சேருமென எதிர் பார்க்கப்படுகிறது.

## மண்ணெண்ணைக் கப்பல் வருகிறது

மண்ணெண்ணெய் பெட் ரோலியம் பொருள்களின் தட்டுப்பாடும் விரைவில் நீங்கவிருக்கிறது. மண் எண்ணெய் பெற்ரோல் ஆகிய வற்றைஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வரவிருக் கிறது. இக்கப்பல் இம்மா தம் 16ந் திகதி பருத்தித் துறைத் துறைமுகத்தை வந் தடையுமென எதிர்பார்க்கப் படுகிறது.

எண்ணெய்த்தாங்கிக் கப் பல் வந்து யாழ்ப்பாணப் பகுதித் துறைமுகங்களில் எண்ணெய் விநியோகம் செய்வதற்கான வசதிகள் இல்லையாதலால் பெட்ரோ லும் மண்ணெண்ணையும் பீப் பாக்களில் அடைக்கப்பட்டுக் கொண்டுவரப்படுவதாகத் தெரிகிறது.

## பயங்கரவாதிகளை ஒடுக்க வெளிநாடுகளின் உதவி

இலங்கையில் பயங்கர வாதிகளின் வன்முறைத் தாக்குதல் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு நேச நாடு கள் பல ஆயுதங்கள் கொடுத்து உதவுவதற்கு முன்வந்து அவற்றை அனுப்பி இருப்பதாகவும், இவ்வாறு உதவிசெய்ய முன் வந்துள் நேச நாடுகளுக்கு பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நன்றி தெரிவித்து இருப்பதாகவும் அரசாங்கத் தகவலொன்று தெரிவிக்கிறது. இரண்டு நாடுகள் ஏற்கனவே உதவி யளித்துள்ளதாகவும், மற் றும் இரு நாடுகளின் ஆயு தங்கள் இலங்கைக்கு வந்து கொண்டிருப்பதாகவும்செய் திகள் தெரிவிக்கின்றன.

எல்லோருக்கும்
எமது
அன்புகலந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

### புதுவருடம்

யாழ்ப்பாணம், புதன்

இந்துக்களின் புதுவருட மான விரோதிகிருது இன்று அதிகாலை 3 மணி 11 நிமிடத் தில் பிறந்துள்ளது.

இந்து வருடப்பிறப்புக் கான விசேட பூசைகள் ஆலயங்களெங்கிலும் இன்று நடைபெறுகின்றன. கைவி சேடம் கொடுப்பதற்குரிய சுப நேரமாக அதிகாலை 3 மணி 11 நிமிடம் தொடக் கம் 7 மணிவரையுள்ள சுப நேரம் குறிக்கப்பட்டுள்ளது. இக்குறிப்பிட்ட காலவெல்லை தவறினால் வெள்ளிக்கிழமை காலை 9 மணி 52 நிமிடத்துக் கும், 10 மணி 28 நிமிடத்துக் குமிடைப்பட்ட வேளையில் கைவிசேடம் கொடுக்க லாம்.

## இரவு முழுதும் விமானச் சேவை

கொழும்புக்கும் யாழ்ப்பா ணத்துக்குமிடையில் நேற் றிரவும், நேற்று முன்தின மிரவும் விமானப் போக்கு வரத்துச் சேவை நடை பெற்றது. நேற்று முன்தின மிரவு பன்னிரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் விமானச்சேவை நடைபெற் றதாகவும், கொழும்பில் தங்கிநின்ற பலர் இவற்றில் பிரயாணம் செய்ததாகவும் எயர் சிலோன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கட்டு நாயக்காவிலிருந்து இரண்டு மூன்று தடவை 'ரைடன்ட்' விமானமொன்றும்பிரயாணி களை பலாலிக்கு ஏற்றிவந்து சேர்ந்தது நேற்றிரவு இரத் மலானைக்கும் பலாலிக்கு மிடையில் நடைபெற்ற சேவையில் 'டகோட்டா' விமானமும் 'அவ்ரோ' விமா னமும் ஈடுபட்டிருந்தன.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தங்கியிருக் கும் பல்கலைக்கழக மாண வர்களும் விமானத்தில் இட வசதி கிடைத்தமையால் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருக்கிருர்கள்.

நேற்று முன் தினமிரவு பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த பிரயாணிகள் பலரும் தங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதிகளின் அணி கலைகிறதாம்;

### திருமலையிலும் 6 பேர் கைது

கோட்டை, புதன்

நாட்டின் பல்வேறு பகுதி களிலும் பயங்கரவாதி களின் பெருந்தொகையான சீருடைகள் வெடிமருந்து கள், துப்பாக்கிகள், ஆயு தங்கள் காணப்படுவதாக வும் அவற்றை கைவிட்டு அவர்கள் ஓடிவிட்டதாக வும் இராணுவ அதிகாரி கள் தெரிவித்துள்ளதாக அரசாங்க அறிக்கையொ ன்று தெரிவிக்கிறது.

பெருந்தொகையான பய ங்கரவாதிகள் தம் அணியி லிருந்து விலகிவிட்டதாக வும் பல இடங்களில் கவ னிப்பாரற்றுக் கிடக்கின்ற உடைகளை அரசாங்கம் கைப்பற்றியுள்ளதென்றும் பொதுமக்கள் அவ்வித உடைகளையோ ஆயுதங் களையோகண்டால் பொலிஸ் நிலையங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது, பயங்கரவாதிகளின் முகாங் களில் உணவுப் பொருட் களும் ஆயுதங்களும் குறை ந்துள்ளமையால் பொது மக்களை பயங்கரவாதிகள் கொள்ளை அடிக்க முற்பட் டுள்ளதாகவும் அவர்களைத் தாக்கியதாகவும் மேலும் அந்த அறிக்கையில் விவரிக் கப்பட்டுள்ளது.

கண்டி காலிப் பகுதி யில் சிறுவர்களை துப்பாக்கி முனையில் கடத்திச்செல்லும் சம்பவங்களும் நடைபெற் றுள்ளதாம்.

மகாவெலச்சியா பகுதி யில் பயங்கரவாதிகள் கூட் டுறவுச் சங்க சமாசத்தை கொள்ளையிட்டு உணவுப் பொருட்களைக் கைப்பற்றி

(5-ம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு நேரம்

இன்று மாலை
4-00
மணி முதல்

நாளை காலை
6-00
மணி வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஸிகப் பெருமக்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
**எஸ். ரி. ஆர்.**
பிலிம்ஸ் ஸ்தாபனத்தார்
தமது அன்புகலந்த
**புத்தாண்டு வாழ்த்துக்களை**
தெரிவிக்கின்றனர்.
**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 மணிக்கு மட்டும்
சிவாஜி — கே. ஆர் விஜயா
நடித்த
**தங்கை**

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30 மட்டும்
மாஸ்ரர் பிரபாகர்
பேபி சுமதி - லெட்சுமி
நடித்த
**வா ராஜா வா**

---

சினிமா ரஸிகர்கள் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் சினிமாஸ் லிமிடெட் ஸ்தாபனத்தார் தங்கள் உள்ளங்கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்
3-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 9-30
**எம். ஜி. ஆர்.** (இருவேடங்களில்)
**சரோஜாதேவி**
**ரத்னா**
நடித்த
**எங்க வீட்டுப்பிள்ளை**

---

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்
கெப்பிட்டல் - பிளாஸா - மைலன் திரைகளில்
**ரவிச்சந்திரன் ஜெயலலிதா**
**மனோகர், அசோகன், ஆனந்தன்**
**நாகேஷ், சுந்தரராஜன்**
நடித்த
விஜயகா பிக்சர்ஸ்
**மூன்றெழுத்து**
(மர்மச்சித்திரம்)

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்
தினசரி 10-30 மட்டும்
ராஜ்குமார் - நர்கிஸ் நடித்த
**அவன்**

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**வெஸ்லிசினிமா**
சுன்னிப்பாய்
தினசரி 10-30. மட்டும்
ஜெமினிகணேசன் - விஜயகுமாரி நடித்த
**குழந்தையும் தெய்வமும்**

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 9-30. மட்டும்
சிவாஜி - சரோஜாதேவி நடித்த
**அன்பளிப்பு**

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!
**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m. 12-30 p.m.
Spell Binding Suspence Thriller
BANDITS in ROME

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!
REGAL - Jaffna
Daily 10-15 a.m. Only
Audi Murphy
in
BULLET FOR A BAD MAN

---

# மானிப்பாய் மருதடி பிள்ளையார் ஆலயம்

எக்காரியத்தைத் தொடங்கும் போதும் விக்னேஸ்வரப் பெருமானை வழிபட்டே தொடங்கவேண்டும் மென்பது சைவப்பெருமக்களின் அசையாத நம்பிக்கை 'திருவாக்கும் செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்' இத்தகைய சிறப்புள்ள விக்கினேஸ்வரப் பெருமானின் ஆலயங்களுள் வடபகுதியில் சிறந்து விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம். விநாயகப் பெருமானின் தேர்த் திருவிழா புத்தாண்டு பூத்துள்ள இன்று நடைபெறுகிறது.

பண்டைக்காலம் தொடக்கம் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் ஓர் விசேஷஸ்தலமாக விளங்கிறது. இத் திருக்கோவிலில் பொங்கலே விசேடம் பெற்றுள்ளது. எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு சைவ குடும்பமும் புதுவருஷத்தன்றோ அதற்கு முதல் நாள் இரவோ பொங்கலும் மோதகமும், பழங்களும் படைத்து வழிபாடு செய்தது. அக்காலத்தில் இப் பொங்கலுக்கு வரும் வண்டிகள் கணக்கில் அடங்கா, மேற்கு பக்கத்திலிருக்கும் வயல் வெளிகளில் எல்லாமாக அரைமைல் நீளம் அகலமாக பொங்கல் மயமாகவே இருக்கும் இதைவிட 365 நாளும் பொங்கல் இல்லாத நாளே கிடையாது. ஆரம்ப காலம் தொட்டு சைவகுருமார்களே பூசை செய்து வந்தனர். அதன் பின்னர்தான் பிராமணக் குருக்கள்மார் மார் பூசை செய்கின்றனர்.

இவ்விடம் ஒரு மகான் சமாதியாய் அடங்கின இடமென்று மக்களால் வழங்கப்பட்டு வருகிறது பெருமானை வழிபடும் அடியார்கள் கனவில் அவர் ஒரு கிழரூபமுள்ள மனிதனாக காட்சி அளிக்கின்றார் பொது மக்கள் மருதடி கிழவனென்றே அழுதழுது தங்கள் வரங்களை

(5-ம் பக்கம் பார்க்க)

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்
தகரக்கடை இல. 18 ன் குத்தகை - 1971.

1. யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் கட்டப்பட்டு வாடகைக்குக் கொடுக்கப்படும், பெரியகடை பஸ் நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள தகரக் கடை இல: 18 ஐ 1-5-1971 தொடக்கம் 31-12-71 வரைக்கும் குத்தகைக்கு விடும் முகமாக கேள்விப்பத்திரங்கள் மன்ற ஆணையாளரால் 1971 ஆண்டு சித்திரை மாதம் 26-4-71-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
2. கடையின் மாதாந்த வாடகை ரூபா 80/- ஆகும்.
3. மாநகர அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சாய்ப்பு சாமான்களையும், சர்பத்போன்ற குளிர் பானங்களையுமே சித்திபெற்ற கேள்விக்காரர் இக்கடையில் விற்கலாம்
4. கேள்விப்படிவங்கள் 25-4-71 ம்திகதிஞாயிற்றுக்கிழமை பி. ப 3-00 மணிவரை வழங்கப்படும். கேள்விப் படிவம் ஒன்றின் விலை ரூபா 5/-. அதற்குரிய பிணைப் பணம் ரூபா 25/-.
5. இதுவிடயமாகஇதர தகவல்களைப் பெறவிரும்புவோர் அவற்றை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.


மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்
12-4-71. 3241

---

சினிமா ரஸிகர்களுக்கும் மற்றும் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உள்ளம்நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்
**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00
சிவாஜி கணேஷன்
கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

---

## எல்லோர்க்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!



உங்களுக்குத் தேவையான
**பொஷ் & பேக்கின்ஸ்**
(BOSCH) (PERKINS)
உதிரிப்பாகங்களுக்கு
வடபகுதி ஏகவிநியோகஸ்தர்களாகிய எங்களுடன்
தொடர்பு கொள்ளுங்கள்:
**சமுத்திரா ட்றேட்ஸ்** BOSCH லிமிட்டட்
232 ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம் தொலைபேசி: 7236 தந்தி: 'சமுத்திரா'
கொழும்புக் கிளை: 18, ரேகினி வீதி, கொழும்பு-6 தொலைபேசி: 83755
வல்வெட்டித்துறைக் கிளை: யாழ்ப்பாண வீதி, வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைந்தமிழ்ப் பாடல்கள் விளக்கும் இன்பம் இசைந்த இளவேனில்

வ. குகசர்மா

ஒரு வருடத்தை ஆறு பருவ காலங்களாகப் பிரித்தனர் ஆன்றோர். அவை இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்பன. இளவேனிற் பருவம் சித்திரை, வைகாசி மாதங்களுக்குரிய பருவமாகும். வருடப்பிறப்பு அல்லது புதுவருடம் என நினைக்கும்போது வேனிற் காலத்து இனிய நினைவுகளும் நம்முன்னே தோன்றும் இக்காலத்தை வஸந்தருது என்றும் சொல்லுவார்கள்.

## கடுந்திறல் வேனில்

மிகுந்த குளிரைக் கொடுக்கும் முன்பனி காலத்து வாடைக் காற்றும் தாங்க முடியாத குளிரினையுடைய பின்பனிக்காலமும் வானத்தில் காணப்படும் மேகக் கூட்டங்களும் அற்றுப்போக வானத்தின் நீல நிறமும் இடையிடையே தோன்றும் வெண் முகில்களும், வீசுகின்ற தென்றற் காற்றும், ஒரு புதுமையை ஏற்படுத்துவன. சூரியனது வெப்பம் மிகுந்து காணப்படுவது வேனிற் பருவத்தேயாகும்.

'பகல் கான்று எழுதரு
பலகதிர்ப் பருதி
காய்சினம் திருகிய
கடுந்திறல் வேனில்'

என்பது பெரும்பாணாற்றுப்படை. வெப்பம் விரியும் வேனிற் பருவத்தை பாலை நிலத்திற்குரிய பெரும்பொழுதாகக் கொண்டனர் அகப்பொருள் நூலார் வெப்பத்தின் வெம்மையிலும் அகத்திணைக்குரிய அன்பு நிறைந்த காட்சிகளை நாம் காணுகிறோம்

## கலைமானின் அன்பு

ஒரு கணவன் தன்னுடன் வரவிரும்பிய மனைவிக்கு வேனிற்காலத்து காட்டுவழியின் கொடுமையைக் கூறுகிறான். மலைமேல் மூங்கில்கள் வெப்பத்தைத் தாங்கும் இயல்புடையன, ஆனால் அவைகூட பட்டுப்போகும்படி சூரியனின் திரண்ட கதிர்கள் காய்கின்றன என்று கூறுகிறான். அத்துடன் அங்கே காணும் நல்ல காட்சியையும் எடுத்துக் கூறுகிறான். அங்கே ஆறுதலையும் இனிமையையும் தரும் நிழல் இல்லை. இளமை பொருந்திய பெண்மான் வெயிலால் வருந்தி நிழலைத் தேடித்திரியும் கலைமான் அதன் மீது வெயில் விழாமல் தன் நிழலைக் கொடுத்து உதவும் என்பதே அந்த நல்ல காட்சி. கலைமானின் சிறந்த குணத்தைக் காட்டும் ஒரு காட்சியை ஐந்திணை ஐம்பது என்னும் நூலில் காண்கின்றோம். இளவேனிற் பருவத்தே சுனையின் கண்ணே நீர் குறைவாகக் காணப்படும் ஒரு கலைமானும் ஒரு பெண்மானும் ஒரு சுனையின் கண் நீரருந்தச் சென்றன. சுனையிலுள்ள நீர் ஒரு மானுக்குத்தான் குடிக்கப் போதியது. கலைமான் யோசித்தது தான் நீர் குடியாவிட்டால் பெண்மான் நீர் குடியாது. ஆகவே கலைமான் நீர் குடிப்பது போலப் பாவனைசெய்தது பெண்மானோ கலையும் நீர் குடிப்பதாகக் கருதி போதிய நீரைக் குடித்துவிட்டது.

'சுனைவாய் சிறுநீரை
யெய்தாதென் றெண்ணிப்
பிணைமா னினிதுண்ண
வேண்டிக்-கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சுஞ்
சுரமென்பர் காதல
ருள்ளம் படர்ந்த நெறி'

## செய்நன்றி மறவா பீடுடையாளர்

வேனிற் பருவத்திற்கு முந்திய பருவங்களில் ஆறானது பெருகிப்பாயும். பல கால்வாய்களைக் கொண்டதாகவும் விளங்கும். அதனால் அதன் அயலிலே நின்ற மரங்கள் செழிப்படையும் வேனிற் பருவம் வந்தது ஆற்றுப் படுகை மணற்படுகையாக மாறி விட்டது. சின்னஞ் சிறு கால்வாய்களில் அருவி போல நீர் ஆங்காங்கே ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆறு தான் மிக்க நீராகிய செல்வச் செழிப்புடன் இருந்த போது கரையில் மரங்களுக்கு மாத்திரமா உதவியது? மிருகம் மக்கள் யாவருக்கும் உதவியது உதவி செய்த ஒருவர் கெட்டுப்போய் விட்டால் அவர்க்குப் பதில் உதவி செய்வது பீடுடையாளர் கொள்கை செய்நன்றிமறவாத மரங்கள் அந்த ஆற்று மணல் மீது மலர்களைத் தூவி அழகு செய்கின்றன வண்டுகள் இசைபாடுகின்றன.

'முன் ஒன்றுதமக்காற்றி
முயன்றவர் இறுதிக்கண்
பின்ஒன்றுபெயர்த்தாற்
றும் பீடுடையாளர் போல்
பன் மலர் சினையுகச்
பிமிர்த்துவண்டார்பன
இன்பமர் இளவே
னில் இறுத்தது'

என இக்காட்சியை பாலைக்கலி எடுத்துப் பேசுகின்றது,

## மயிலும் குயிலும்

இளவேனில் பருவத்திற்கு தலைவன் மன்மதன் அவனுக்கு வேனிலான் என்ற பெயரும் உண்டு தென்றல் அவனுடைய தேர் குயில் அவனுடைய காளவாத்தியம் வேனில் என்றால் குயிலுக்கு மகிழ்ச்சி; மயிலுக்கு லுக்கு கவலை மயிலுக்குரிய பருவம் கார். அக்காலத்தில் குயில் ஒடுங்கிவிடும், இதனைக்கம்பர்.

'ஆடின மயில்கள் பேசா
அடங்கின குயில்களன்பர்
கேடறத் தளர்ந்தார்
போன்றும். கிளர்வுறக்
கிளர்ந்தார் போன்றும்

என அழகுபெற எடுத்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்
'யுனிக்' றேடியோ விநியோகஸ்தர்களான
V. K. இராசரத்தினம் ஸ்தாபனத்தார்
தமது ஆதரவாளர்கள், பாவனையாளர்கள்
அனைவருக்கும் தமது உளங்கனிந்த
புதுவருட வாழ்த்துக்களைத்
தெரிவிக்கின்றனர்
V. K. இராசரத்தினம்
(பிரபல
றேடியோ விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்)
95, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
புதுவருட வாழ்த்துக்கள்
ஈஸ்வர் கோப்பறேசன்
அன்
றேடியோனிக்
(பிரபல றேடியோ உப-உறுப்பு
இறக்குமதியாளர்களும், விற்பனையாளர்களும்)
18, ஸ்ரான்லிறேட். யாழ்ப்பாணம்.
போன்: 7308

அனைவருக்கும் எங்கள்
உளம் நிறைந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

★ கவர்ச்சியான இழை
★ நீடிய பாவிப்பு
★ சொகுசான ஓட்டம்
★ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு

ஆகியவற்றிற்கு
உங்கள் தேய்ந்துபோன டயர்களை
எம்மிடம் புதுப்பியுங்கள்

நோர்தேண் இன்டஸ்ட்ரீஸ்

டயர் நிரப்புபவர்கள்
8/1; ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7158

உங்கள் இல்லங்கள் புத்தாண்டில்
பொலிவுடன் விளங்க

அழகும், பிரகாசமும், நீடித்து உழைக்கும்
திறனும் ஒருங்கே அமையப்பெற்ற

"யாழ் மார்க்"
அலுமினியப் பாத்திரங்களை
வாங்கிப் பாவியுங்கள்
மற்றும்
செம்பு, பித்தளைப் பாத்திரங்களையும்
உற்பத்தி செய்பவர்கள்

யாழ் உலோகத் தொழிற்சாலை
250-254 கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.
Grams: "Yarlmetal" Phone: 7049

எல்லோருக்கும் எமது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

நாதன் மியூஸிக்கல் ஸ்ரோர்ஸ்
(பிரபல இசைக்கருவி விற்பனையாளர்களும், பழுது பார்ப்பவர்களும்)
23, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.

எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

பூமா தண்ணீர்ப் பம்புகள்
புதிய சக்தியுடன் இயங்குகின்றன
கமக்காரர்களுக்கு உற்ற நண்பனாகத் திகழ்வது இந்த இயந்திரம்
★ 30 அடி ஆழமான கிணற்றில் நீரை இழுக்கும்
★ மணித்தியாலம் 7000 கலன் தண்ணீர் இறைக்கும் ★ ஒரு வருடம் உத்தரவாதமுடையது
மற்றும் எல்லாவிதமான இயந்திர உபகரணங்களும் தொழில் நுட்ப ரீதியில்
உடனுக்குடன் தயாரித்துக்கொடுக்கப்படும்.
தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:
சிலோன் இன்டஸ்றியல் இஞ்ஜினியறிங் வேக்ஸ்
150, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைந்தமிழ்ப் பாடல்கள் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி), கூறுகிறார். இளவேனிற் பருவத்தே மயில்கள் ஒடுங்குவதை

"விறிய செங்கோல்
வேந்தன் வெளிப்பட
சேயங்காவல்
மாறிய வேந்தன் போல
ஒடுங்கிய மயில்களெல்
லாம்"

எனப்பரஞ்சோதி முனிவர் எடுத்துக்காட்டுகிறார்.

## 5-வது வசந்தவிழா

மலர்களைத்தேடிப் பறிக்க வேண்டாதபடி தாமே கொடுக்கும் கொடையாளர் போன்று மலர் மரங்களில் மிகுத்து விளங்கும் இளவேனிற் பருவத்தே ஆலயங்களில் சிறப்பு விழா எடுப்பார்கள். முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள திருப்பரங்குன்றில் வேனில்விளையாட்டு நிகழ்வதை

ஒண்ணுதார்க்கடந்தடுஉம்
உாவுநீர்மா கொன்ற
வெவ்வேலான் குன்றின்
மேல் விளையாட்டும்
விடும்பார் கொல்"

என்னும் பாலைக்கலிச் செய்யுளடிகளால் அறி கிறோம் சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாரோடு திருவொற்றியூரில்மகிழ்ச்சியொடு வீற்றிருந்தகார் வசந்தகாலம் வந்தது' தென்றல் வீசியது; திருவாரூரில் நடக்கும் வசந்த விழாவின் இனிய காட்சி அவர்மனக்கண்முன் தோன்றியது.

"பொங்குதமிழ்ப்பொதிய
மலைப் பிறந்து
பூஞ்சந்தனத்தின்
கொங்கலைந்து குளிர்சார
லிடைவளர்ந்த
கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரு
ரணிவீதி யழகரவர்
மங்கலநாள்வசந்தமெதிர்
கொண்டருளுஉம் வகை
நினைந்தார்"

தமிழுக்கும் தென்றலுக்கும் உள்ள தொடர்பு இப்பாட்டு மூலம் நன்கு தெரிகிறது. தென்றலும் தமிழும் மக்களுக்கு இன்பம்பயக்கும் இருசகோதரர்.

கோடை வெயிலில் தான் நிழலின் அருமை தெரியும். கோடை வெயில் பிறவித் துன்பத்தைப் போன்றது. அந்தக் காலத்தில் நிழலைக் கொடுக்கும் குளிர்ந்த தருவைப் போன்றவன் ● இறைவன். கோடைப்பருவமாகிய இளவேனிற் பருவத்தே ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீர் போன்றவன் இறைவன் அத்தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மலரைப் போன்றவன் மேடையிலே வீசுகின்ற மெல்லிய தென்றலும் அத்தென்றலால் அடையும் சுகமும் போன்றவன் இறைவன் இவ்வாறு இளவேனிற் காலம் இறைவன் பெருங்கருணையையும்நினைத்து வழிபடத் தூண்டுகிறது.

"கோடையிலே யிளைப்
பாற்றிக் கொள்ளும் வகை
கிடைத்த குளிர் தருவே
தருநிழலே நிழல்
கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற
தீஞ்சுவைத் தண்ணீரே
யுகந்த தண்ணீரிடை
மலர்ந்த சுகந்த மண
மலரே, மேடையிலே வீசு
கின்ற மெல்லிய பூங்
காற்றே மென்காற்றில்
விளை சுகமே சுகத்திலுறும்
பயனே" என்றுஇறைவனை பாடினார் இராமலிங்கர்.

# இருவருக்கு கத்திக்குத்து

குருநகர், புதன்

மண்டைதீவைச் சேர்ந்த இருவர் கத்திக்குத்துக் காயங்களுடன் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சு. பூபாலன், லோறன்ஸ் ஆகிய இருவருமே கத்திக் குத்துக்கு இலக்கானவர்களாவர். குடும்பத்தகராறே இக்கைகலப்புக்குக் காரணமெனக்கூறப்படுகிறது. சந்தேகத்தின் பேரில் ஒருவரைப் பொலிசார் தேடுகின்றனர். இதுசம்பந்தமாக மேலும் விசாரணை நடைபெறுகின்றது.

# ரூ. 15780 லட்சம் கடன்

கோட்டை, செவ்.

1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையுள்ள புள்ளி விபரத்தின்படி இலங்கை பிறநாட்டுக்கு வழங்கவேண்டிய கடன் 15780 லட்சம் ரூபாவாகும் இக்கடன் தொகை மேலும் 1880லட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது.

# அமெரிக்க உதவி நிறுத்தக்கோரிக்கை

நியுயோர்க், ஏப். 13

அமெரிக்க குடியரசுக்கட்சி ஜனநாயகக்கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த இரு செனட்டர்கள் பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவிகள் நிறுத்தப்படவேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

அமெரிக்கா அளித்த ஆயுதங்களைக் கொண்டே அரசினர் கிழக்குவங்காள மக்களை படுகொலைசெய்து வருவதாகவும் அதனால் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்துவரும் இராணுவ உதவிகளோடுமற்றும் உதவிகள் யாவும் முற்றாக நிறுத்தப்படவேண்டுமெனவும் அமெரிக்க அரசைக்கோரும் பிரேரணை ஒன்றை செனட்டில் கொண்டுவருவார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

அரியாலை, புதன்

கால் நடைகளை கட்டாக்காலிகளாக அலைய விடுவதினால் விவசாயிகளுக்கு பெரும் பண பொருள் நஷ்டம் ஏற்படுகின்றது. சொந்தக்காரர்கள் தமது கால் நடைகளை கட்டி பாதுகாப்பாக வளர்க்க வேண்டும், என்ற தீர்மானத்தை அரியாலை விவசாயிகள் சங்கம் நிறைவேற்றியுள்ளது.


சகல விதமான றேடியோக்கள்
ஒலிபெருக்கிகள், ஒலி பதிப்புக் கருவிகள்
கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகள்
இவற்றைக் குறைந்த செலவில் திருத்தஞ்செய்யச் சிறந்த ஸ்தாபனம்

றேடியோஸ்பதி

40, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
உரிமையாளர்: சி. பூபதி

[திருத்தஞ்செய்த சகல பொருட்களுக்கும் ஒரு வருட உத்தரவாதமுண்டு]

எல்லோர்க்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்!
கண்ணையும் — கருத்தையும்
கவரும்



தங்க - வைர நகைகளை
தெரிவு செய்ய
சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம்.
மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகைமாளிகை
கன்னாதிட்டி, (போன்: 585) யாழ்ப்பாணம்.




*சிங்கர் கம்பனியின் ஓர் வர்த்தக சின்னம்

எல்லோர்க்கும் எமது
புதுவருட வாழ்த்துக்கள்!




நீடித்து
உழைப்பதில்
நிகரேதும்
இல்லாதது
யூ ஆசா
பற்றறிகளே

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

துரை அன் கோ
23/3, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்,
கிளை: கண்டி றேட். பரந்தன்.

நீடித்த உழைப்பும்
நிறைந்த பயனும்மிக்க
உலகில்
புகழ்பெற்ற
றேடியோக்கள்



மிகவும் நிதானமான விலையில் கிடைக்கக்கூடிய
நம்பகமான ஸ்தாபனம்
மருவாதிரக்க
S. சுலைமான்கண்டு & பிறதர்
5 & 7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியர் தாக்கினால் சீனா பாகிஸ்தானுக்கு உதவும்

## கி. பாகிஸ்தான் புரட்சி மந்திரிசபை உதயம்

புதுடில்லி, ஏப்ரல் 13

**பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் ஏதும் நடத்துமானால் சீனா பாகிஸ்தானுக்கு உதவியளிக்குமாம்.**

**இத்தகவலை பாகிஸ்தான் வானொலி அறிவித்திருக்கின்றது.**

**கிழக்குப் பாகிஸ்தானில் ஷேக்முஜிபுர் ரஹ்மான் தலைமையில் ஆறுபேர் கொண்ட மந்திரிசபையொன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் செய்தி வந்திருக்கின்றது.**

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடியில் இந்தியா தலையிடுவதாக பாகிஸ்தான் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருவது தெரிந்ததே.

பாகிஸ்தான் கப்பல் ஒன்றை இந்தியக் கப்பல்கள் வழிமறித்துத் தாக்கியதாகவும் பாகிஸ்தானுக் கெதிரான பொய்ச் செய்திகளை இந்தியா இரகசியவானொலி மூலம் ஒலிபரப்புவதாகவும் முன்பு பாகிஸ்தான் குற்றஞ் சாட்டியிருந்தது. அண்மையில் கிழக்குப் பாகிஸ்தானுக்குள் ஊடுருவிய இந்திய படைஅணிகள் இரண்டை அழித்து விட்டதாகவும் பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியது. இக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையுமே ஆதாரமற்றவையென்று இந்தியா மறுத்துள்ளது. இந்த நிலைமையில் பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் ஏதும் நடத்தும் பட்சத்தில்பாகிஸ்தானுக்கு சீனா உதவி புரிவதாக வாக்களித்திருக்கிறதாம்.

இந்த வாக்குறுதி பற்றி சீனதரப்பில் எதுவித உறுதிமும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்தியா பாகிஸ்தான்மீது தாக்குதல் நடத்துமானால் உதவியளிப்பதாக சீனப்பிரதமர் சூ-என்-லாய் உறுதியளித்திருப்பதாக பாகிஸ்தான் வானொலி அறிவித்தது. இந்த உதவி எந்த மாதிரியில் அமையும் என்பது பற்றிய தகவல் எதுவும் கொடுக்கப்படவில்லை.

### அமெரிக்கா மறுபரிசிலனை

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா அளித்துவரும் உதவிகள்பற்றி மறு பரிசிலனை செய்யவிருக்கின்றது.

உயிருக்கு ஆபத்து விளைவிக்காத ஆயுதங்கள் உதிரிப் பாகங்கள் வெடிமருந்துகள் ஆகியவற்றை பாகிஸ்தானுக்கு வழங்குவதென்று 1967ம் ஆண்டில் செய்த முடிவை அமெரிக்க அரசாங்கம் மறுபரிசிலனை செய்யவிருப்பதாக அந்த நாட்டு அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கிழக்குப் பாகிஸ்தான் நெருக்கடியில் அமெரிக்க ஆயுதங்கள் பாவிக்கப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க அரசாங்கம் கவலை தெரிவித்திருப்பதை தொடர்ந்து பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்குவது நிறுத்தப்படுமா என்று கேட்கப்பட்டதற்கு அவர் பதிலளித்தார்.

### ஷேக் தலைமையில் மந்திரிசபை

கிழக்குப் பாகிஸ்தானில் அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் தலைமையில் 6 பேர் கொண்ட மந்திரிசபையொன்று அமைக்கப்பட்டிருப்பதாக ஏஜன்சி தகவல்கள் தெரிவித்திருக்கின்றன. ஷேக் முஜிபுர் ரஹ்மான் மந்திரிசபையில் அக்கிராசனராகவிருப்பார். அவாமிலீக்கின் பொதுச் செயலாளர் திரு தாஜுதீன் அகமத் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளாராம். இந்த மந்திரிசபை எங்கிருந்து செயல்படும் என்பது பற்றி தகவல் இல்லை.

இம் மந்திரிசபை தமது புதிய அரசை ஏற்றுக்கொள்ளும்படி ஜனநாயகநாடுகளைக் கேட்டுள்ளது.

### தூதர்களுடன் கோஸிஜின் ஆலோசனை

மாஸ்கோவிலுள்ள இந்திய-பாகிஸ்தான் தூதர்களுடன் சோவியத் பிரதம மந்திரி திரு. கோஸிஜின் தனித்தனியே ஆலோசனை நடத்தினார். முக்கியமாகக் கிழக்கு பாகிஸ்தான் நிலைமை குறித்து அவர் இந்தத் தூதர்களுடன் ஆலோசித்திருக்க வேண்டுமென்று தெரிகின்றது.

### ஜெட் விமானத் தாக்குதல்

கிழக்குப் பாகிஸ்தானில் மேற்குப் பாகிஸ்தான் ஜெட் விமானங்கள் மேலும் முக்கிய நகர்கள்மீது குண்டு வீசித் தாக்கியிருக்கின்றன. இந்தத் தாக்குதல்களினால் 100க்கு மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. தினஷ்பூர், குஷ்தியா, ராஜ்சாஹி ஆகிய நகரங்கள்மீது ஜெட் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தரைப் படைகளுக்கு ஆதரவாக இந்த விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

---

### மானிப்பாய்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுப் பெற்றுக் கொள்வர். நாற் புற மதில்களும் அமைந்த மருதடி விநாயகர் ஆலயம் இந்திய நாட்டிலுள்ள பாடல் பெற்ற திருக்கோவில்களை நினைவூட்டுகிறது. அன்று காலம் சென்ற தாகைமறைமலை அடிகள் இவ்வாலயத்தை வழிபாடு செய்தபொழுது கூறியுள்ளார்.

இ.பெ வ மா.முதலியார்

---

### அகிம்சை வாரம்

பாணந்துறை, செவ்

அகிம்சை இயக்கத்தின் 47 வது வருடத்தையொட்டி அகிம்சைவாரம் மே மாதம் முதல் வாரத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. இவ்வகிம்சை வாரத்தைக் கொண்டாடும்படி அகிம்சை இயக்கச் செயலாளர் நாட்டிலுள்ள சகலரையும் கேட்டுள்ளார்.

கொல்லாமை, புலாலுண்ணாமை, மிருங்களால் இழுக்கப்படும் வாகனங்களில் பிரயாணம் செய்யாமை ஆகியவற்றை மேற்படி அகிம்சை வாரத்தில் மேற் கொள்ள வேண்டுமெனவும் கேட்கப் பட்டுள்ளது. இவற்றைவிட இவ்வாரத்தில் பழமரங்களை நாட்டுதல் மற்றும் நாட்டின் உணவுற்பத்தியை பெருக்குவதற்கான வேறு வேலைகளைக் கவனித்தல் ஆகியனவும் மேற் கொள்ளப்பட வேண்டுமென மக்களுக்கு அகிம்சைஇயக்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

......

### 342-வது சுவீப் 15ந் திகதி இழுக்கப்படும்

கோட்டை, செவ்.

இம்மாதம் 6-ந் திகதி இழுக்கப்பட வேண்டிய 342-வது இலக்கமுடைய தேசியசுவீப் இம்மாதம் 15-ம் திகதி இழுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சிட்டிழுப்பு கொழும்பு லொத்தர்சபை அலுவலகத்தில் பகல் 12 மணி வரையில் இழுக்கப்படும்.

......

### கைகலப்பில் காயமடைந்தார்

கொடிகாமம், செவ்.

கொடிகாமப் பகுதியில் நேற்று இரு கோஷ்டியினருக்கிடையில் நடந்த கைகலப்பில் ஒருவர் பலத்த காயமடைந்து சாவச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிசார் இச் சம்பவம் பற்றி விசாரணைசெய்து வருகின்றனர். இச் சம்பவம் சம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

---

### 18ந் திகதி விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் விசாரணை இம்மாதம் 18-ம் திகதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. ——

### பாராட்டுபசாரம்

குருநகர், புதன்

உரும்பராய்ப் பட்டின சபையின் 1ம் வட்டார உறுப்பினர் திரு. ந. அரியரத்தினத்தின் சேவையைப் பாராட்டு முகமாக இவ்வட்டாரத்திலுள்ள செல்வபுரம் குடியேற்றத்திட்டம் சிங்கங்கிண்டி ஆகிய பகுதியைச் சேர்ந்த மக்களால் புதுவருடதினத்தன்று பாராட்டுபசாரம் அளிக்கப்படவிருக்கிறது.

......

### வேதவேள்வியும் பஜனையும்

யாழ்ப்பாணம், புதன்

இன்று புதுவருடத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் பஜனையும், நாட்டு நன்மைக்காக சட்டநாதர் ஆலயத்தில் வேதவேள்வியும் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்ச்சிகளில் கவியோகி ஸ்ரீசுத்தானந்த பாரதியார் கலந்துகொள்வார்.

......

### பயங்கர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளனரென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளனது.

### திருமலையில் ஆறு பேர் கைது

திருகோணமலைப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட பயங்கரவாதிகள் 6 பேர்கள் கைக்குண்டு ஆயுதங்கள் உள்ள இடங்களைத் தெரிவித்துள்ளார்களாம் இதைத் தொடர்ந்து அவை கைப்பற்றப்பட்டனவாம்.

பயங்கரவாதிகளுக்கும் பொலிஸ் இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனரென்றும் அரசாங்க தரப்பில் எவரும் கொல்லப்படவில்லையென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பயங்கரவாதிகளுக்கு எதிராக றக்குவானைப் பகுதியில் அரசாங்கத்துக்கு உதவி புரியும் தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் என்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதிகளின் கைவசமுள்ள ஆயுதங்கள் உணவுப்பொருட்கள் என்பன குறைவதனால் அவர்கள் இயக்கம் சீர்கெட ஆரம்பித்துள்ளதென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

---


எல்லோருக்கும் எமது அன்புகலந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்கள் இல்லங்களுக்குத் தண்ணீர் பைப் வசதிகளை அமைக்கும்பொழுது

துருப்பிடிக்காத — பாரமற்ற — விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பெற்ற

எஸ்-லோன்

பைப்புகளை இணைக்க மறவாதீர்கள்

உங்களுக்கு வேண்டிய இலவச ஆலோசனைகளை எங்கள் ஸ்தாபனத்திலோ அல்லது எங்களால் நியமிக்கப்பெற்றவர்களிடமோ சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம்.

[illegible] மற்றும்

நீங்கள் புதிதாக அமைக்கும் வீட்டுடன் சேர்ந்த குளிக்கும் அறைகளில் (ATTACHED BATH ROOM) இணைப்பதற்கு வேண்டிய சகல விதமான மாபிள் பொருட்களும் எங்களிடமுண்டு.

சகலவிதமான தண்ணீர் வசதிகளுக்குத் தேவையான முழு உப உறுப்பினங்களும் எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நியூரோன் எலெக்றிக்கல்ஸ்

மின்சார உபகரணங்கள் விற்பனையாளர்கள்:

ஸ்ரான்லி றேட், போன்: 7016 யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அன்பு - பகை, இன்பம் - துன்பம் என்னும் இரட்டைக் குணத் தொகுதியிலிருந்து விடுதலை பெறுவதே சத்தியத்தைத் தேடும் முயற்சியின் முதற்படியாகும். ... மகாத்மா காந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் விரோதிகிருது வருஷம் சித்திரை மாதம் 1-ந் திகதி (14-4-71)

## நம்பிக்கை ஒளி

இன்று புத்தாண்டு பிறக்கிறது. இந்நாட்டின் இருபெரும்சமூகங்களான சிங்கள தமிழ் மக்களுக்கு இது ஒரு புனிதமான ஆன்மீகத்தினமான போதிலும் "புண்ணிய பூமி" எனக் கருதும் இந்நாட்டில் வாழும் சுமார் ஒருகோடியே இருபது லட்சம் மக்களுக்கும் இது மகிழ்ச்சிக் கொண்டாட்டத் தினமாகும். கடந்தகாலங்களில் வாழ்க்கையில் வசதி படைத்தவர்களும் வசதி குறைந்தவர்களும் கூட புத்தாண்டை புதிய நம்பிக்கையுடன் மகிழ்ச்சியோடு வரவேற்று வந்திருக்கின்றனர். இது நமது மரபும்கூட.

புத்தாண்டுத் திருநாளில் பட்டாசுவெடிகளின் சத்தங்களையும் வாணவேடிக்கைக் காட்சிகளையும் கேட்டும் கண்டும் மகிழும் நமது நாட்டில் கைக்குண்டுகளினதும் துப்பாக்கிகளினதும் வெடிச்சத்தம் கேட்கும் உள்நாட்டுச் சண்டையைப் போன்ற துன்பச் சம்பவங்கள் நிகழ்வது யாருக்கும் மகிழ்ச்சியளிக்கமுடியாதது. என்றாலும் கருமேகத்தினூடே ஒரு நட்சத்திரம் பிரகாசிப்பதுபோன்று இருள் சூழ்ந்துள்ள இச்சமயத்தில், கடந்த சில வருடங்களில்போன்று இப்போதைய சம்பவங்களுக்கு வகுப்புவாத முத்திரை குத்திக் கிளறிவிடப்படாமலிருப்பது சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும், ஐக்கியத்தையும் விரும்பும் அனைவருக்கும்எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் ஏற்படுத்துவதாகும். கடந்த கால்நூற்றாண்டு காலத்தில் நாட்டின் எந்தப்பகுதியில் எந்தவொரு சம்பவம் நிகழ்ந்தாலும் அதற்கு வகுப்புவாதத் திருப்பத்தைக் கொடுத்து கலகத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவது சரியாகவோ தவறாகவோ நடந்துவந்த விஷயம். இந்தத் துர்ப்பாக்கிய சம்பவங்களின் பயனை நாடு அனுபவித்து அதன் விளைவுகளை நன்கு உணர்ந்து தெளிந்துள்ளது.

இன்று இந்த நாட்டின் சரித்திரமே அறிந்திராத வகையில் இன்று'பயங்கரமான பலாத்காரச் சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இச்சமயத்தில் வகுப்புவாதப் பூசல் கிளப்பப்படாமல் இருப்பது நாடு செய்த பெரும் பாக்கியம் என்று சொல்ல வேண்டும். அரசியல் ஆதாயத்தையும், சுயநலத்தையும் நோக்கமாகக்கொண்ட சில தீவிரவாதிகளும், சில பத்திரிகைகளும் வகுப்புவாதத்துக்குத் தூபம்போட்டுவந்ததன் விளைவுதான் இப்படியொரு பயங்கர இயக்கம் இந்த அளவுக்கு வளர்ந்துவந்தது வெளிப்படாமலிருந்ததற்குக் காரணம் என்றும் சொல்லலாம். என்றாலும் இந்த வன்முறைக் கிளர்ச்சியில் வகுப்புவாதத்தை இழுத்துக் கலந்துவிடாதது பெரும் காரியம்.

இதேசமயம் கருத்து வேறுபாடுகளை மறந்து நாட்டின் அமைதியையும் ஐக்கியத்தையும் பாதுகாக்கவும், வன்முறைச்செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென இந்நாட்டின் முக்கிய மதங்களைச் சேர்ந்த தலைவர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பது நாட்டுக்குப் பெருமைதருவதாகும்.

ஆனாலும் மதத் தலைவர்களோ இனத் தலைவர்களோ வெறுமனே வேண்டுகோள் விடுவதால் மட்டும் பிரச்னைகள் யாவும் தீர்ந்து உண்மையான தேசிய ஒற்றுமை ஏற்படுமென எதிர்பார்க்க முடியாது.

என்றாலும் கடந்தகால அனுபவங்களில் இருந்தும் இன்று நாட்டில் நடைபெறும் சம்பவங்களைக் கொண்டும் நாட்டுக்காகத் தமது உயிரையே பணயம்வைத்து. தியாகத்தீயில் வெந்த பொலிஸ், ஆயுதப்படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் இன, மத, மொழி வேறுபாடுகள் அனைத்தையும் ஒதுக்கிவைத்து, நாட்டினதும் நாட்டு மக்களினதும் நலனையுமே குறிக்கோளாகக் கொண்டு அனைவரும் எதிர்காலத்தில் வாழ்வதற்கு இன்று பிறக்கும் புத்தாண்டு வழிசமைக்க வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை. மக்களின் பிரார்த்தனையும் இதுவேயாக அமையட்டும்.

ஐக்கியம் என்ற நம்பிக்கை ஒளிக்கீற்றுத் தென்படும் இச்சமயத்தில் பிறக்கும் புத்தாண்டு மக்களுக்குச் சந்துஷ்டியும் சுபீட்சமும் தருவதாக அமையட்டும்.

வாசக நேயர்கள் அனைவருக்கும் 'ஈழநாடு' தனது உளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

விற்பனையாளர் தேவை

சுன்னாகம், மருதனாமடம் ஆகிய இடங்களில் 'ஈழநாடு' பத்திரிகை விற்பனைசெய்ய விற்பனையாளர்கள் உடனடியாகத் தேவை பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் உடன் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, ஈழநாடு' யாழ்ப்பாணம்

# "கட்சி வேறுபாடின்றி வன்முறையைஒழிப்போம்"

## நிதிஅமைச்சர் என். எம். வேண்டுகோள்



கோட்டை, செவ்வாய் கட்சி வேறுபாடுகளை கவனியாது நாட்டிலுள்ள பிரஜைகள் அனைவரும் நாட்டில் இன்று தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தையும் அராஜக நிலையையும் நீக்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும்'

இவ்வாறு நிதியமைச்சர் கலாநிதி என். எம்.பெரேரா இன்று நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள வானொலிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:

பயங்கரவாதிகளைக் கொன்று குவிப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது. பகுத்தறிவற்ற பயங்கரச் செயலைவிடுத்து அவ்வியக்கத்தில் ஈடுபட்டுள்ளவர் நாட்டின் ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்வதற்கு முன்வரவேண்டும்.

இத்தகைய பயங்கரச் செயல்களை ஒழித்துக்கட்டுவதற்கு நாட்டில் வாழுகின்ற சகல பிரஜைகளும் பாதுகாப்பு நிறுவனங்களை நிறுவுவதற்கு முன்வரவேண்டும்

இப்பயங்கர இயக்கத்துக்கு அடியாக நாட்டிலுள்ள நல்ல அரசாங்கத்தை முறியடிப்பதற்கான சக்திகளுள்ளன. எந்தவித சக்திகளினாலும் நாட்டின் அரசியலை அழித்துவிடமுடியாது தீவிரவாதிகளின் முயற்சிகளை முறியடிக்க அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

நாட்டிலுள்ள ஒவ்வொரு இல்லத்திலும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் ஒளிவிடக்கூடியதான நிலை உருவாகுவதற்கும் சுபிட்சமும் ஆக்கமும் செழிப்பதற்கும் எந்தவிதமான பாகுபாடுகளையும் விடுத்து சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

குறுகிய வளங்களையுடைய சிறிய நாடு நமது நாடு. பயங்கரவாதிகளின் அழிவுச் செயல்களின் விளைவை அது தாங்கிக்கொள்ள முடியாது.

# 'தேசாபிமானமுள்ள மக்கள் அரசுடன் ஒத்துழைக்கவேண்டும்

## எம். ஸி. சுப்பிரமணியம் எம். பி. வேண்டுகோள்!

யாழ்ப்பாணம், புதன் "அரசாங்கம் எடுத்துள்ள பாதுகாப்பு நடவடிக்கையினால் பயங்கர இயக்கத்தின் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோதிலும் ஸ்திரமற்ற நிலைமை நிலவிவருகிறது. எனவே இந்நிலைமையை தொடர்ந்து நீடிக்கவிடாது தடுப்பதற்கு இந்நாட்டின் தேசாபிமானமுள்ள சகல மக்களினதும் ஒத்துழைப்பு அவசியமானதாகும்."

இவ்வாறு ஆட்சிமன்ற நியமன எம். பி. திரு. எம். ஸி. சுப்பிரமணியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:

"பாசிஸக் கொள்கையும், பயங்கர நடவடிக்கையும் கொண்ட ஓர் இயக்கம் இந்நாட்டின் ஆட்சியைப் பலாத்காரமாகக் கைப்பற்றும் நோக்கமாகக் கடந்த சில நாட்களாக நாட்டின் பல பாகங்களிலும் பயங்கர நடவடிக்கையில் இறங்கிப் பலரின் உயிருக்கு உலைவைத்ததுமல்லாமல், பொதுமக்களின் உடைமைகளை நாசஞ்செய்தும், அராஜகநிலைமையை உருவாக்கி நாட்டின் சமாதானத்துக்கும், பொருளாதார முன்னேற்றத்துக்கும் பங்கம் ஏற்படுத்திவருவதை யாவரும் அறிவீர்கள். திட்டமிட்ட வன்செயல்களும், பலாத்கார நடவடிக்கைகளும் இவர்களின் கொள்கையெனின் அதனால் பாதிக்கப்படுபவர்கள் இந்நாட்டின் பொதுமக்களே."

## இரவுமுழுதும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் இடங்களைப் போய்ச் சேருவதற்கு இலங்கைப் போக்குவரத்து சபையின் ஒத்துழைப்புடன் வடபகுதிப் பொலிஸார் பாதுகாப்பு போக்குவரத்து ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

## அரசாங்க அதிபர் தலைமையில் மகாநாடு

யாழ்ப்பாண மாவட்டத்தில் உணவுப்பொருள் விநியோகம் மற்றும் பாதுகாப்பு நிலைமைபற்றி அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா தலைமையில் நேற்று அரசாங்க செயலகத்தில் நடந்த ஒரு மகாநாட்டில் ஆராயப்பட்டது வடபகுதிப்பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் வடபகுதி இராணுவத் தளபதி ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர். வடபகுதியில் நிலைமை சீராக இருக்கிறதென்றும் மகாநாட்டின் முடிவில் திரு விமல் அமரசேகராவும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. சுந்தரலிங்கமும் தெரிவித்தனர்.

சீனிக் கப்பலும், மண்ணெய்க் கப்பலும் யாழ்ப்பாணம் வந்து சேரும்வரை ஒரு குடும்பத்துக்கு ஒரு போத்தல்வீதம் மண்ணெண்ணெய் விற்பனைசெய்யவும், ஓர் ஆளுக்குக் கால் இறாத்தல் சீனி விநியோகஞ்செய்யவும் ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதாக அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] வெளியிடப்பட்டது.

# ஆண்டவன் அருளே உறுதுணை-

## கவியோகியின் புத்தாண்டு செய்தி

யாழ்ப்பாணம் வந்துள்ள கவியோகி சுத்தானந்த பாரதியார் 'ஈழநாடு' மூலம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தி வருமாறு!

புத்தாண்டு பொலிக! தமிழருக்குச் சித்திரை வருடப்பிறப்பு புத்துயிரும் புதுவாழ்வும் அளிப்பதாக!

உலகம் முழுவதும் கலகம் நிறைந்திருக்கிறது. கலகம் நீங்கி மகிழ்ச்சி பொங்க உறுதுணை ஆண்டவன் அருளே!

புத்தாண்டுநாளான இன்று நாம் முருகப் பெருமானை வணங்கி அருள்பெறுவோமாக!

இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க, அருளே பொலிக, அன்பே வாழ்க!

## அத்தியாவசியம்

கோட்டை, செவ்.

நாட்டில் பாண்போறணைச் சேவை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ளவர்களுக்குப் போதிய பாண் வழங்குவதற்கு உதவியாகப் பாண் போறணையாளர் கூடுதலான தயாரிப்பில் ஈடுபடுவதற்கு மேலதிக மாவை வழங்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

## விளையாட்டுப் போட்டி ரத்து

காங்கேசன் துறை, செவ்

புத்தாண்டுத் தினத்தன்று நடைபெறவிருந்த காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக் கழக வருடாந்த விளையாட்டுப்போட்டி ஊரடங்கு உத்தரவு காரணமாக ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக கழகத்தினர் அறிவிக்கின்றனர்.

## யாருடையது?

யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் வீதியைச் சேர்ந்த நாகையா சொர்ணலிங்கம் என்பவர் பெரியகடை காங்கேசன்துறைவீதி 4-ம் ஒழுங்கையில் திறப்புக்கோர்வையொன்றைக் கண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org